# ஸ்ரீரங்கத்தில்

## ஹிந்தி எதிர்ப்புப்

# பொதுக்கூட்டம்.

## கி. ஆ. பெ. விசுவநாதம்

### தலைமை யுரை.

## எஸ்- எஸ்- பாரதியார்

### வீரமுழக்கம்.

—(o)—

## காங்கரஸ் பார்ப்பனர்கள் காலித்தனம்.

(நமது நிருபர்)

ஸ்ரீரங்கம், நவ 22.

ஸ்ரீரங்கம் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீரங்கம் கார்னேஷன் ஹால் முன்பாக 21-11-37 அன்று மாலை 4 மணிக்கு ஹிந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டம் ஒன்று சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து சுமார் 1000 பேர்கட்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

லால்குடி தோழர் கணேசன் அவர்கள் கீதம்பாடினார். மற்றொரு தோழர் தமிழ் கீதங்கள் பாடினார். தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் இப்பொதுக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக்கூறி திருச்சி தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை இப்பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஸ்ரீரங்கம் தமிழ்ச் சங்கத் தலைவரும் பெஞ்சுகோர்ட்டு தலைவருமாகிய தோழர் எம். ஆறுமுகம் பிள்ளை அவர்கள் அதைஆமோதித்தார். தலைவர்கட்குச் சங்க உபதலைவர் தோழர் வை. ராமசாமி முத்துராஜா அவர்கள் மாலை சூட்டினார். திருச்சி தோழர் கி. ஆ. பெ. விவசுநாதம் அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கப் போவதை பலமாக ஆட்சேபித்துக் கூறி, ஹிந்தியால் தமிழ் வளர்ச்சி குன்றும், தமிழர் நாகரீகம் ஆதிக்கம் அழியும் என்றும் பல மேற்கோள்களுடன் விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்.

### தோழர்கள் சொற்பொழிவு.

அதன் பிறகு தோழர்கள் தி. பொ. வேதாசலம், தமிழ்ப்பண்டிதர், தேவநேசப் பாவாணர், அ. பொன்னம்பலம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் எம். எ. பி. எல்., ஆகியவர்கள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கப்படுவதின் நோக்கம், ஹிந்தியால் தமிழர்கட்கும் தமிழ் மொழிக்கும் ஏற்படப் போகும் கேடுகள் ஆகியவைகளைப்பற்றி விளக்கிக் கூறி ஹிந்தியைத் தமிழர்கள் கட்டாயபாடமாகப் படிக்க முடியாதென்றும் அதனால் எவ்விதப் பயனுமில்லையென்றும் காங்காஸ் மந்திரிகள் ஹிந்திலயக் கட்டாய பாடமாக வைககு முயறசியில் நடந்து கொள்ளும் போக்கு மிகவும் வெறுக்கத்தக்கதாகவும், எதிர்க்கத்தக்கதாகவும் இருக்கிறதென்றும் தமிழ் நாட்டில் தமிழ் மக்கட்கு ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கும்படி யார் மந்திரிமார்களை கேட்டுக்கொண்டார்களென்றும், காங்கரஸ் கமிட்டியாவது அகில இந்திய காங்கரஸ் கமிட்டியாவது ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கத் தீர்மானிக்கவேயில்லையென்றும் கனம ஆச்சாரியாரின் சர்வாதிகார வெறியில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவேன்; யார் எதிர்த்தாலும் சரி என்று அகம்பாவமாகப் பேசுவது ஜனநாயக ஆட்சி முறைக்கு ஏற்றதல்லவென்றும் புராணக் கதைகள் மூலமாக மக்களை இனியும் ஏமாற்ற எண்ணுவது எதற்காக வென்றும் தமிழர்களை "குரங்குகள்" "அறிவிலிகள்" என்று குறும்புத்தனமாகப் பேசுவது எதற்காக என்றும் அநுமார் சமஸ்கிருதம் படித்தார்; ராமனுடன் சமஸ்கிருதத்தில் பேசினார்; அதனால் எல்லோரும் ஹிந்தி படிக்கவேண்டுமென்று கூறுவது எவ்வளவு மோசமான பித்தலாட்டக் கதைகளென்றும், ஹிந்தியால் ஒற்றுமை ஏற்படும் என்பது கேலிக் கூத்து என்றும் கனம் முதல் மந்திரி ஆச்சாரியார் சத்தியமூர்த்தி, டாக்டர் கனம் ராஜன், முதலியவர்கட்கும், கனம் சுப்பராயன், கனம் ராமநாதன் ஆகியவர்கட்கும் 'தினமணி' ஆசிரியருக்கும் தமிழ் மொழி வளர்ச்சியைப் பற்றி என்ன தெரியுமென்றும் இம்மந்திரிக் கும்பல்கள் ஆளுக்கொரு மாதிரியாகவும் ஒரே மந்திரி பல மாதிரியாகவும் புரிந்தும் புரியாமலும் பேசிக்கொண்டு ஹிந்தியை ஆதரிப்பது எதற்காகவென்றும், முதலில் இவர்களுக்காவது ஹிந்தியைப் பற்றி தெரியுமா? என்றால் அதுவும் பூஜ்யம் தானென்றும் நமது இளம் மாணவர்கள் ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் படிப்பதின் மூலம் முன்னேற்றம் தடைபடுத்தப்படுமென்றும் எல்லாத் தமிழர்களும் ஒற்றுமையுடன் கட்டுப்பாடாக ஹிந்தி கட்டாய பாடமாக்கப்படுவதை பலமாக எதிர்க்கவேண்டுமென்றும் தமிழர்கள் முன்னேற்றத்திற்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழர் ஒன்றுபட்டுழைத்து வெற்றியும் மேன்மையும் பெற வேண்டுமென்றும் விளக்கமாகவும்விரிவாகவும் உணர்ச்சி ததும் பவீரம் ததும்ப விரிவுரை நிகழ்த்தினார்கள்.

### கேள்விகளுக்கு பதில்.

ஹிந்தியை ஆதரித்துப் பேசுபவர்களுக்கும், கேள்வி கேட்பவருக்கும் இடம் கொடுத்து மேடைக்கு அழைத்தார்கள். இச்சமயம் 5, 6 கேள்வித் துண்டுக் கடிதங்கள் கொடுத்தார்கள். அதற்கு ஆணித்தரமான அழகாக தோழர் எஸ். எஸ். பாரதியார் அவர்கள் பதில் கொடுத்து வீரமுழக்கம் செய்தார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசாச்சாரி என்ற காங்கரஸ் பார்ப்பன வாலிபர் தனக்குப் பேச இடம் கேட்டார். இடம் கொடுக்கப் பட்டது.

அவர், கனம் முதல் மந்திரி ஆச்சாரியார் உடம்பு முழுதும் பார்ப்பன விஷம் இருப்பதாகச் சொல்லப்பட்டதைதான் நம்பவில்லை யென்றும், அவர் ஹிந்தி வளர்ச்சிக்காக வடநாட்டு ஜமன்லால் பஜாஜ் அவர்களிடம் உதவித்தொகை வாங்கினார் என்பதுநம்பமுடியாததென்றும், ஆனால் தானும் ஹிந்தியை பலமாக எதிர்ப்பதாகவும் பேசிவிட்டுப் போனார்.